# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

## CASE NO.MCOP.41/2018
## Deposition of P.W.1- சந்தியா
## Dated: 21.04.2023.

**ம.சா.1 1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனு விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. மனு விபத்தில் இறந்து போனவர் எனது கணவர். எனது கணவர் தமிழ்நாடு சிறப்பு காவல்துறையில் இளைஞர் காவல் படையில் காவலராக வேலை பார்த்தார். எனது கணவரும் 1வது எதிர்மனுதாரரும் நண்பர்கள். எனது கணவரும், 1வது எதிர்மனுதாரரும், 2வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். மனு விபத்தின் போது 1வது எதிர்மனுதாரர் நிதானமாகவும் சாலைவிதிகளை கடைபிடித்தும் தான் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது கணவரும் 1வது எதிர்மனுதாரரும் மறவன்குடியிருப்பில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் பயிற்சிக்காக சென்றிருந்தார்கள் என்றால் சரிதான். மனு விபத்தானது நாகர்கோவில் - திருவனந்தபுரம் தேசீய நெடுஞ்சாலையில் வில்லுக்கறி அருகே நடைபெற்றது. 4வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனர் தான் பேருந்தை அதிவேகமாகவும், கவனகுறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனு விபத்தை ஏற்படுத்தினார் என்ற சொன்னால் சரிதான். எனவே மேற்படி பேருந்து எனது கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி எனது கணவர் தூக்கி வீசப்பட்டார் என்றால் சரிதான். விபத்தை பார்த்த மக்கள் எனது கணவரையும், 1வது எதிர்மனுதாரரையும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். மருத்துவமனைக்கு நான் சென்ற பிறகு தான் எனது கணவர் இறந்த விபரம் எனக்குத் தெரிய வந்தது. எனது கணவர் மாதம் ரூ.7,500/- சம்பளத்தில் தான் மேற்படி இளைஞர் காவல் படையில் வேலை பார்த்து வந்தார். அதை தவிர வேறு வேலை அவர் பார்க்கவில்லை. பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனரை இம்மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கை 4வது எதிர்மனுதாரருக்குரிய பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனர் தனது வேலையை பாதுக்காப்பதற்காக காவல்துறையை சுவாதீனப்படுத்தி 1வது எதிர்மனுதாரர் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 4 வது எதிர்மனுதாரரிடமும் பேருந்தை ஓட்டுனரிடமும் தான் இழப்பீடு கோர முடியும் என்றால் சரியல்ல. 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் எனக்கு

எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர்கள் கிடையாது என்றால் சரியல்ல. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல. நான் அதிக இழப்பீடு பெறுவதற்காக உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செலவு தொகையுடன் இம்மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

27.02.2014 அன்று எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது. நடந்த சம்பவத்தின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 1வது எதிர்மனுதாரர் கார் ஒன்றை முந்திச் செல்ல முயற்சித்த போது தான் மனு விபத்து 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும், நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. மனு விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. மனுவில் 4 வது எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோரவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் தான் எனது கணவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே 4 வது எதிர்மனுதாரருக்கு எதிராக நான் இழப்பீடு கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவிலும், எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் 4 வது எதிர்மனுதாரரின் ஓட்டுனர் மனு விபத்திற்கு காரணம் என்பதாக கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுனரை மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை. 1வது எதிர்மனுதாரர் எனது கணவரின் நண்பர் என்பதால் 1வது எதிர்மனுதாரரின் மீது தவறு இல்லை என்பதாக கூறுகிறேன் என்றால் மனு விபத்திற்கு 1வது எதிர்மனுதாரரும் பேருந்தின் ஓட்டுனரும் காரணமாவார்கள். மனு விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மனு விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகைஅதிகமானது என்றும், மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை எங்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. பேருந்தின் ஓட்டுனரால் மனு விபத்து ஏற்படவில்லை என்றும், எனவே 4 வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் கிடையாது என்றும், சொன்னால்சரியல்ல. 4 வது எதிர்மனுதாரருக்குஎதிராக இம்மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால்சரியல்ல.